REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: கார்த்திகை 22உ சனி (7—12—57) ★ ★ வெளியூர்: கார்த்திகை 23உ ஞாயிறு (8—12—57) [இதழ் 151

வலியைப் போக்க மயக்கம் அளிக்காத புது மருந்து

பிலடெல்பியா—

மயக்கம் அளிக்காததும், வலியை ஒழிக்கக்கூடியதுமான 'சாசிட்ரின்' என்னும் ஒரு புதுமருந்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம். ஆஸ்பிரினால் குணப்படுத்தமுடியாததும், ஆனால் மார்பின் போன்ற மருந்துகள் தேவைப்படாததுமான வலியை இப்புது மருந்து குணப்படுத்துமாம்!

சப்பாத்தியைச் சாப்பிட்டுத் தமிழர் உயிர் வாழ வேண்டுமாம்

அரிசிக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்படுமெனசென்னை சர்க்கார்அச்சம்

மக்கள் உணவுப் பழக்கத்தை மாற்றிக்கொள்ள வேண்டுமென்கிறார் மந்திரி

சென்னை, டிச. 7—

அரிசித் தேவையைப் பூர்த்திசெய்வதில் நெருக்கடி ஏற்படக் கூடும் என சர்க்கார் அஞ்சுகிறதாம்!

அதற்காக, கொஞ்சமேனும் அரிசியைச் சேமிக்கவேண்டுமென சர்க்கார் கருதுகிறதாம்!

இதற்கு உதவும்வகையில், உணவு விடுதிக்காரர்கள், அரிசி அல்லாத இதர உணவுப் பொருள்களை—குறிப்பாகக் கோதுமையைப் பிரபலப்படுத்த வேண்டுமாம்!

கோதுமையில் செய்த பண்டங்களை மக்கள் உண்ணப் பழகுவதற்கு இந்த விடுதிக்காரர்கள் உதவவேண்டுமாம்!

விடுதிக்காரர்களிடத்தில் மாநில உணவு மந்திரி பக்தவத்சலம் இவ்வாறு கேட்டுக்கொண் டிருக்கிறாராம்!

"நெருக்கடி ஏற்படும் என்ற நோக்குடன் மட்டுமில்லாமல் சத்துள்ள உணவு என்ற கண்ணோட்டத்தில், கோதுமையைப் பிரபலப்படுத்துவதற்கும் மக்கள் தங்கள் உணவுப் பழக்கங்களை மாற்றிக்கொள்வதற்கும் ஒரு நீண்டகாலத் திட்டமும் தேவை"

என்று, மந்திரி கூறினாராம்!

உணவுப் பழக்கங்களை மாற்றிக் கொள்ளுமாறு மக்களைக் கட்டாயப்படுத்த மாட்டார்களாம்! படிப்படியாக அந்த மாற்றம் ஏற்படவேண்டுமாம்! இதற்கு உணவு விடுதிகள் உதவ வேண்டுமென மந்திரி கேட்டிருக்கிறாராம்!

உணவு விடுதிக்காரர்களும், சப்பாத்தியைப் புகுத்தி, அரிசிப் பண்டங்களைப் படிப்படியாகக் குறைத்துக்கொள்வதாக உறுதி தந்திருக்கிறார்களாம்!

விருந்துகளுக்கு உணவு விடுதிகள் ஒப்பந்தம் செய்யப்படும் போது, ஏற்பாடு செய்கிறவர்கள் வற்புறுத்தினாலன்றி, அரிசிப் பண்டம் படைக்கக் கூடாதாம்! வற்புறுத்தினாலும், குறைந்தபட்ச அரிசியையே உபயோகித்து கோதுமை கலந்த பண்டங்களையே படைக்கவேண்டும் என்றும் அவர் உணவு விடுதிக்காரர்களிடம் கேட்டிருக்கிறாராம்!

சட்டம் இயற்றியும் பயன்படவில்லையாம்!

இந்தியப் பேரரசின் சட்ட அமைச்சர் வருந்துகிறார்

புதுடில்லி, நவ. 7—

"சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ள குழந்தைகள் திருமணங்கள் நாட்டில் அதிகப்படியாக நடைபெறுகின்றன" என்று, சட்ட அமைச்சர் திரு. சென் வெளிப்படையாக மக்கள் சபையில் ஒப்புக்கொண்டார்.

இராஜஸ்தானில் அடிக்கடி குழந்தை மணங்கள் நடைபெறுகின்றனவாம். அதுபற்றி உற்றார் உறவினருக்கு முன் கூட்டியே பல சமயங்களில் தெரிந்திருந்தும், அவர்களில் யாரும் அதனைத் துணிந்து கிறுத்த முற்படவில்லையே என்றும் அவர் வருத்தத்துடன் தெரிவித்துள்ளார்.

வெறும் சட்டம் இயற்றி நோக்கத்தை நிறைவேற்ற முடியாது என்பது, சட்ட அமைச்சரின் கூற்றிலிருந்து தெரியவருகிறது.

வருமானத்தில் பாதி சர்க்கார் ஊழியருக்கே செலவாகிறதாம்!

மேலும் சம்பள உயர்வு கேட்பது ஆச்சரியமாக இருக்கிறதாம்!

கம்யூனிஸ்டு மந்திரி பேசுகிறார்

கோட்டயம், டிச. 4—

"சர்க்கார் வருவாயில் கிட்டத்தட்ட பாதி பாகம் சர்க்கார் ஊழியர்களின் சம்பளப் பணத்திற்காகச் செலவு செய்யப்படுகிறது. இதனால், கேரள அபிவிருத்தி வேலைகளில் எதிலும் முன்னேற முடியவில்லை. இந்தச் சம்பளமும் போதாதென்று சர்க்கார் ஊழியர்கள் கேட்பது ஆச்சரியமாக இருக்கிறது" என்று கேரள கம்யூனிஸ்டு மந்திரிசபையின் ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு. சாத்தன் கூறினார்.

கோட்டயம் பஞ்சாயத்து அதிகாரிகள் சங்கத்தின் கோட்டயம் மாவட்ட மாநாட்டை 1-ந் தேதி காலை 11 மணிக்கு மந்திரி திரு. சாத்தன் ஆரம்பித்துவைத்தார்.

மந்திரி தமது திறப்புரையில் மேலும் குறிப்பிட்டதாவது:—

"கேரளத்தின் மொத்த மக்கள் தொகையினரில் இரண்டேமுக்கால் சதவிகிதத்தினர் சர்க்கார் ஊழியர்களாக இருக்கிறார்கள். இவர்கள், கேரள மாநிலத்தின் மொத்த வருவாயில் 45 சதவிகிதத்தையும் சம்பளமாகப் பெற்றுக்கொள்கிறார்கள். இதனால் ஏற்படும் பணமுடை, மாநில அபிவிருத்தி வேலைகளைப் பாதித்துவருகிறது. பல திட்டங்கள் கெட்டுப் போய்விட்டன. சுதந்தரம்பெற்று 10 வருடங்களாகியும், மக்களுக்கு இனியும் உண்ண உணவு கிடைக்கவில்லை. மொத்த வருமானத்தில் 45 சதவிகிதம் சர்க்கார் ஊழியர்களுக்காக செலவாகிவிட்டால், மீதியுள்ள 55 சதவிகிதத் தொகையைத்தான் ஐந்தாண்டுத் திட்டத்திற்கும், இதர செலவுகளுக்கும் பயன்படுத்தவேண்டியிருக்கிறது. இந்தத் தொகையைக்கொண்டு எதுவும் செய்ய இயலாது.

"உணர்ச்சிகளைக் கிளப்பும் வார்த்தைகளைக்கொண்டே கோஷங்களைக் கிளப்புவதால் பயனில்லை. நாம் நிரம்ப விஷயங்களைப் படிக்கவேண்டியிருக்கிறது. அங்ஙனம் படித்தால்தான் உண்மை நிலைகளை உணரமுடியும்.

"வருமானத்தில் 45 சதவிகிதம் சம்பளமாகச் செலவாகிறதென்றால், இந்த மாநில அபிவிருத்திகள் நஷ்டப்படுகின்றன என்றுதான் ஆகிறது. இதற்கு பொறுப்புதாரிகள் யார்? இந்த மாநில சர்க்காரிலுள்ள கடைசிப் பந்தியான பியூனிலிருந்து உயர்தர உத்தியோகஸ்தர் வரையிலுமாவர். உத்தியோகஸ்தர்கள் எங்ஙனம் சம்பளம் வாங்குகிறார்கள்?

"கல்வி இலாகாவிலும், தேசிய விஸ்தரிப்புத் திட்ட இலாகாவிலும், ரெவின்யூ இலாகாவிலும் அவசியத்திற்குமேற்பட்ட ஊழியர்கள் இருந்துவருகின்றனர்.

"பஞ்சாயத்து அதிகாரிகள் சம்பளம் அதிகமாகக் கோருகின்றனர். அவர்களின் எல்லாக் கஷ்டங்களையும் சீர்தூக்கிப் பார்த்துத்தான் சம்பளம் தருகிறோம். எனவே, கிடைப்பதைத் திருப்தியாகப் பெற்றுக்கொள்ளவேண்டும். அங்ஙனம் திருப்திப்படவில்லையானால் மீதி விஷயங்களை நான் சொல்லவா வேண்டும்?

"பூனைகளுக்குக் கிடைத்த அப்பத்தை குரங்கு பங்குபோட்டு எடுத்த கதைபோலவே சர்க்கார் ஊழியர்களது நிலையும் உளது. தேச அபிவிருத்தியில் உங்கள் பங்கு என்ன என்று உங்களிடம் கேட்கிறேன்.

—'தினமலர்': 5-12-57

தடுப்புக்காவல்சட்டத்தின் கீழ் கைதானோர்

11 மாதங்களில் 292 பேர் எனத் தகவல்

புதுடில்லி, டிச. 6—

உள்நாட்டு மந்திரி மக்கள் சபையில் தந்த தகவல்படி, இந்தியா முழுவதிலுமாக 1957 செப்டம்பர் 30-ந்தேதி வரையில், தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் காவலில் இருப்போர் தொகை 205 பேர்கள் என்றும், பஞ்சாப் மாநிலத்தின்தான் அதிகம் பேர்—அதாவது 101 பேர் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர் என்றும் தெரியவருகிறது.

1956 நவம்பர் 1-ந் தேதி முதல் 1957 செப்டம்பர் 30-ந் தேதி வரை மொத்தம் 292 பேர் தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் கைதாயினர். மாநிலவாரியாக-பஞ்சாப் 129; பம்பாய் 49; மைசூர் 49; மேற்கு வங்கம் 43; இராஜஸ்தான் 8; மத்தியப் பிரதேசம் 5; டெல்லி 5; திரிபுரா 2; சென்னை 1; உ. பி. 1-என்றும் கணக்குத் தரப்பட்டிருக்கிறது.

பஞ்சாபில் கைதான 129 பேரில், 111 பேர் இந்து ராஷ்ட்ர சமிதியைச் சேர்ந்தவர்கள் என்றும், பம்பாயில் கைதான 49 பேரில் மூன்று கம்யூனிஸ்டுகளும், ஆறு பி. சோ.-க்களும், ஒரு முன்னாள் காங்கிரஸ்காரரும் இருக்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

ஏந்திழையாள் சிலை!

ரூ. 10,000 செலவு

வீணை ஏந்திய ஏந்திழையாள் சிலை ஒன்று வடித்து, டெல்லி ஒலிபரப்பு நிலையத்தில் நிறுத்தி வைத்திருக்கிறார்களாம்!

இதற்கு ரூ. 10,000 செலவிடப்பட்டதாக மந்திரி கேஸ்கர் கூறியிருக்கிறார், மக்கள்சபையில்.

செயற்கைச் சந்திரன் பறக்கவிடும் முயற்சி

அமெரிக்காவின் படுதோல்வி

அமெரிக்கா, நேற்று வான வெளியில், பரிசோதனைக்காக சிறு செயற்கைச் சந்திரன் ஒன்றை மிதக்கவிடப் போவதாக அறிவித்திருந்தபடி, மிதக்கவிட மேற்கொண்ட முயற்சி பரிதாபகரமாகத்தோல்வியுற்றிருக்கிறது.

சந்திரனை, வானமண்டலத்திற்குத் தூக்கிச் செல்ல வேண்டிய ராக்கெட், சில அடி உயரே சென்றதுமே வெடித்துக்கீழே விழுந்து எரிந்துபோய்விட்டதாம்!

முதல் இருகட்ட ராக்கெட்டுகளும் அவ்வாறு அழிந்தன என்றும், மூன்றாவது ராக்கெட், சிறு சந்திரனுடன், கீழே பத்திரமாக விழுந்துவிட்டது என்றும் கூறப்பட்டிருக்கிறது.

அடுத்தாற்போல், மற்றொரு சந்திரனை மிதக்க விடுவது என்றால், அதற்கு மற்றுமோர் திங்கள் ஆகுமாம்'

ரஷ்யா முதல் சந்திரனை மிதக்கவிட்டு இரண்டு மாதங்களுக்கு மேலாகிவிட்டது.

கைப்பற்றிய டச்சு நிறுவனங்களுக்கு நஷ்டஈடு

'மேற்கு நியூகினியா விவகாரம் தீர்ந்தபிறகே யோசிக்கப்படும்'

இந்தோனேஷிய அமைச்சர் தகவல்

ஜகார்தா, டிச. 6—

தாங்கள் கைப்பற்றும் டச்சு நிறுவனங்களுக்கு நஷ்டஈடு தருவது பற்றி, மேற்கு நியூகினிய விவகாரம்முடிவடைந்த பின்னரே யோசிக்க முடியும் என்றும் ஹாலந்து சர்க்காருடன் பொருளாதார உறவுகளையும் அறுத்துக் கொள்வதென முடிவு செய்யப்பட்டு விட்டதாகவும், எப்போது அதைச் செய்வது என்பதே இன்னும் முடிவாகவில்லை என்றும் இந்தோனேஷிய தகவல் இலாகா மந்திரி சுதிப்ஜோ பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

கே. பி. எம். டச்சுக் கப்பல் கம்பெனிக்குச் சொந்தமான எல்லாக் கப்பல்களும் சர்க்கார் வசம் வந்துவிட்டன என்றும், கப்பல்கள் அனைத்தையும் இந்தோனேஷிய இராணுவத்தினர் பாதுகாத்து வருகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

தொழிலாளர்கள் மேலும் பல டச்சு வர்த்தக தொழில் நிலையங்களைக் கைப்பற்றுவதில் ஈடுபட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

★

ஹாலந்து 'நேட்டோ' தயவை நாடுகிறது!

திஹேக், டிச. 6—

இந்தோனேஷிய சர்க்கார், டச்சு மக்களை, இந்தோனேஷியாவிலிருந்து வெளியேற வேண்டுமென உத்தரவிட்டிருப்பதாலும், டச்சு நிறுவனங்களைக் கைப்பற்றி வருவதாலும், அந்த நிலைமைகளைக் குறித்து விவாதிப்பதற்காக, 'நேட்டோ' கவுன்சிலின் அவசரக் கூட்டம் நடைபெற வேண்டுமென ஹாலந்து சர்க்கார் கேட்டிருக்கிறதாம்!

நம் நாடு
தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 7—12—57 சனி

'வெட்கம்! வெட்கம்!'

'வெட்கம்! வெட்கம்!' எனக் கூக்குரலிட்டுக் கொண்டு, டெல்லி மக்கள் சபையிலிருந்து வெளியேறி இருக்கின்றனர் எதிர்க்கட்சியினர்.

மக்கள் சபையிலிருந்து எதிர்க்கட்சியினர் வெளியேறும் சம்பவங்கள் பல இதற்குமுன் நிகழ்ந்துள்ளன. இருந்தாலும், இப்பொழுது நடைபெற்றுள்ள எதிர்க்கட்சியினர் வெளியேற்றம், நாட்டு மக்களின் சிந்தனையைத் தூண்டக்கூடியதாகும்.

முறையான விசாரணையின்றி, தனி நபர்களை, தாம் விரும்புகின்ற காலம்வரையில் சிறையில் பூட்டிவைக்கும் அதிகாரத்தைத் தமக்கு வழங்கும் பாதுகாப்புச் சட்டத்தின் காலவரம்பை மேலும் மூன்று ஆண்டுக் காலத்துக்கு இந்தியப் பேரரசு நீடித்து வைத்திருக்கிறது.

பாதுகாப்புச் சட்டத்தை மேலும் மூன்று ஆண்டுக் காலத்துக்கு நீடித்துவைக்க வேண்டும் என்பதற்கு மக்கள் சபையில், பேரரசு சார்பில் உள்நாட்டு அமைச்சர் அனுமதி கோரினார். அவ்வாறு சட்டம் மேலும் நீடிக்கப்படுவதை எதிர்த்தே எதிர்க்கட்சியினர் 'வெட்கம்! வெட்கம்!' எனக் கூக்குரலிட்டுக் கொண்டு அவையைவிட்டு வெளியேறியுள்ளனர்.

விசாரணையின்றித் தனி நபர்களை சிறையில் தள்ளி வைப்பது போன்ற கொடிய சட்டங்கள் பலவற்றை ஏற்கனவே இருந்த ஆங்கில ஏகாதிபத்தியம் கையாண்டு வந்திருக்கிறது. அந்த ஏகாதிபத்திய ஆட்சிக்கு—அன்னிய ஆட்சியாக இருந்த காரணத்தினால்—தனி நபர்களின் அடிப்படை உரிமைகளைக் குலைக்கக்கூடிய கொடிய சட்டங்கள் தேவைப்பட்டிருக்கக் கூடும். கொடிய சட்டங்களைக் கையாண்டு, தனது ஆட்சியை நிலைப்படுத்திக்கொள்ள வேண்டியதும் அந்த ஏகாதிபத்திய ஆட்சிக்கு இன்றியமையாததாக இருந்திருக்கலாம். ஏகாதிபத்திய ஆட்சிக் காலத்தில் ஆண்டவர்களுக்கும் ஆளப்பட்டவர்களுக்கும் இருந்துவந்த தொடர்பு, ஒருவர் ஒருவரைப் பார்த்து வெறுக்கக்கூடியதாகும். அதாவது, ஆண்டுவந்தவர்கள் நாட்டு மக்களை அடக்கி ஆள்வதையும், நாட்டு மக்கள் அக்கொடிய ஆட்சியிலிருந்து விடுபடுவதையும் பிறவிப் பணியாகக் கொண்டிருந்தனர். எனவே, ஏகாதிபத்திய ஆட்சியினருக்கு, நாட்டு மக்கள்மீது நம்பிக்கை இழந்து அச்சுறுத்தி அடக்கிவைக்க வேண்டியதும், அதற்கான கொடிய சட்டங்களைக் கையாள வேண்டியதுமான கட்டாயம் இருந்துவந்தது.

ஆனால், இன்றுள்ள நிலை அதுவல்ல. இன்றுள்ள காங்கிரசு ஆளவந்தார்கள் ஏகாதிபத்தியப் போக்கில் நடந்துகொள்ளுபவர்களாக இருந்தபோதிலும்கூட, வன்முறை மூலம் அவர்களை அதிகாரத்திலிருந்து விரட்டக்கூடிய சக்தி இன்று மனம் காட்டவே இல்லை. இருந்துவரும் எதிர்ப்புச் சக்தி குழந்தைப் பருவத்தில் இருப்பதாகும். அந்த எதிர்ப்புச் சக்தி குழந்தைப் பருவத்தில் இருக்கிறது என்பது மட்டுமல்லாமல், அது, வன்முறையை அறவே வெறுத்து ஒதுக்கி வருவதாகவும் இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், விசாரணையின்றி தனி நபர்களை தாம் விரும்புகின்ற காலம் வரையில் சிறையில் தள்ளிவைப்பதற்கென இருந்துவரும் பாதுகாப்புச் சட்டத்தின் கால அளவை மேலும் மூன்று ஆண்டுக்கு நீடித்து வைக்க இந்தியப் பேரரசு முன்வந்து இருப்பது விரும்பக்கூடாதது—வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

ஏகாதிபத்திய ஆட்சிக் காலத்தில் விசாரணையின்றி தனி நபர்களை ஆண்டுக்கணக்கில் சிறையில் தள்ளிவைக்கும் பாதுகாப்புச் சட்டத்தை, இன்று ஆட்சி பீடத்திலிருக்கின்ற பிரதமர் முதல் சாதாரண காங்கிரசுக் கட்சியினர் வரை வரம்பு மீறிக் கண்டித்து வந்திருக்கின்றனர். அப்படிக் கண்டித்து, தனி நபர் உரிமைகளுக்காக வாதாடினவர்கள்தான், ஆட்சி பீடத்திலமர்ந்ததும் அத்தகைய கொடிய சட்டங்களின் உதவியின்றி தங்களால் நாடாள முடியாது என்று முடிவுகட்டி நடந்துகொள்ளுகின்றனர் என்பது, வெட்கக்கேடு மட்டுமல்லமிருந்த வேதனையுமாகும்.

மக்களின் நியாயமான எழுச்சியைத் தடுத்து நிறுத்த, சட்டங்கள்—அவை எவ்வளவு கடுமை வாய்ந்ததாக இருந்தபோதிலும்கூட — இறுதிவரை பயன்பட்டது கிடையாது. மக்களின் நல்லெண்ணத்தை துணைகொள்ள மறந்து, சட்டத்தின் துணையை மட்டுமே நம்பி வாழ்ந்த எந்த அரசும், அது எத்தகைய பலங்கொண்டதாக இருந்தபோதிலும்— என்றென்றும் நிலைத்து நின்றதாக உலக வரலாறு கூறவில்லை. ஆனால் அதற்கு மாறாக, தன்னால் கையாளப்பட்டுவந்த முறையற்ற சட்டங்களே தனது அழிவைத் துரிதப்படுத்தி, உடனடியாகக் குறிப்பிட்ட அரசை வீழ்த்தி இருக்கிறது என்ற பேருண்மை, வரலாற்றில் இடம் பெற்றிருக்கிறது.

இந்தியத் துணைக் கண்டத்தின் குடிமக்களுக்கு அடிப்படை உரிமைகள பல வழங்கப்பட்டிருப்பதாக அரசியல் சட்டம் விளம்பரப்படுத்திக் கொண்டு இருக்கிறது. அந்த அரசியல் சட்டத்தைக் காட்டி மனித உரிமைகளை மதித்து நடந்து கொள்வதில் தங்களைவிட உலகில் வேறு எவரும் இருக்கமுடியாது எனப் பீத்திக் கொண்டுவரும் காங்கிரசு ஆளவந்தார்கள், அவ்வாறு பீத்திக் கொண்டுவரும் அதேநேரத்தில் பாதுகாப்புச் சட்டத்தைக் கைக்கொண்டிருப்பதும், அதற்கு அடிக்கடி உயிரூட்டி வருவதும் முதல்தரமான முரண்பாடு என்பதுடன், உலகத்தவர் எள்ளிநகையாடத்தக்கதுமாகும்.

விசாரணையின்றி தனி நபர்களை சிறையில் தள்ளிவைப்பதற்கெனத் தனியாக ஒரு சிறப்புச் சட்டமே தேவையில்லை. அதற்கான விதி, ஏகாதிபத்திய ஆட்சி பரிசாகத் தந்துவிட்டுப் போன கிரிமினல் சட்ட நூலிலேயே இடம்பெற்று இருக்கிறது.

அதன் துணைகொண்டே, விரும்பத்தகாத கேடான சம்பவங்கள் நிகழ்வதை, நிகழ்வதற்கு முன்னரே, நிகழவொட்டாமல், தாங்கள் விரும்பினால் ஆளவந்தார்களால் தடுத்து நிறுத்த முடியும். விரும்பத்தகாத முதுகுளத்தூர் கோரச் சம்பவத்தை நடைபெறாமல் தடுத்து நிறுத்த, பாதுகாப்புச் சட்டம் கடுகளவும் பயன்படவில்லை என்பதை மக்கள் மறந்துவிடமாட்டார்கள்.

விசாரணையின்றி தனி நபர்களைக் காலவரையறை குறிப்பிடாமல் சிறையில் தள்ளிப் பூட்டிவைப்பதற்குரிய கொடிய பாதுகாப்புச் சட்டம் ஒன்றின் துணையின்றி, உலகப் புகழுடன் விளங்கிவரும் பண்டிதரைப் பிரதமராகக்கொண்டு கோலோச்சிவரும் இந்தியப் பேரரசு, இந்தியத் துணைக்கண்டத்தை ஆளமுடியாது எனத் தீர்மானித்துச் செயல்பட்டு வருவது, வெட்கக்கேடானது—வியப்பிலும் வியப்புக்குரியது!

மணந்துகொள்வதாக உறுதி கூறி பின் மறுப்பது குற்றமா?

'இல்லை' என்கிறது அலகாபாத் உயர் நீதிமன்றம்

அலகாபாத், டிச. 4—

ஒரு பெண்ணை மணந்துகொள்வதாக உறுதிகூறி, அதற்காக முன்பணமும் பெற்றுக்கொண்ட பின்னர் அப்பெண்ணை மணந்துகொள்ள முடியாது என ஒருவர் மறுத்தால், அது நம்பிக்கைத் துரோகம் என்ற விதிப்படி தண்டனைக்குரிய குற்றமா?

இந்தக் கேள்விக்கு, 'இல்லை' எனப் பதிலளித்திருக்கிறது, அலகாபாத் உயர் நீதிமன்றம்.

அலகாபாத் 'அக்கவுண்டெண்ட்-ஜெனரல்' அலுவலகக் குமாஸ்தா, தனது சகோதரியை மணந்துகொள்வதாகக் கூறி, நிச்சயதார்த்தத்தின்போது முன்பணமாக ரூ. 1,500 பெற்றுக்கொண்டபின், சகோதரியை மணந்துகொள்ள மறுத்துவிட்டதாகவும், இது பகிரங்கமான மோசடி என்றும் குற்றஞ்சாட்டி ஒருவர், அந்த குமாஸ்தா மீதும், அவரது தகப்பனார் மீதும் வழக்கு தொடுத்தார்.

வழக்கை விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதி வி. பி. பர்காவா என்பார், 'இந்த வழக்கு சிவில் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட வேண்டிய ஒன்று' என்றும், தண்டனைக்குரிய குற்றம் எதுவும் இதில் இல்லை' என்றும் கூறி, வழக்கைத் தள்ளுபடி செய்திருக்கிறார்.

புதிய இறக்குமதிக் கட்டுப்பாடுகள்

'உற்பத்தியைப் பாதிக்கவில்லை' எனத் தகவல்

புதுடில்லி, டிச. 5—

"அண்மையில் அறிவிக்கப்பட்ட புதிய இறக்குமதிக் கொள்கையினால் தங்களின் உற்பத்தி பாதிக்கப்பட்டிருப்பதாக இந்தியத் தொழிற்கூடங்கள் எவையும் சர்க்காரிடம் முறையிடவில்லை"

என, தொழில்—வர்த்தக மந்திரி மொரார்ஜி தேசாய் தெரிவித்திருக்கிறார்.

"ஏதாவது தொழில் பாதிக்கப்படுமானால், தேவையான நடவடிக்கைகளை சர்க்கார் மேற்கொள்ளும்" என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

ஆதிவாசிகள் தரவேண்டிய கடன்

தள்ளுபடியாகிவிடும்?

பாட்னா, டிச. 5—

ஆதிவாசிகள் தரவேண்டியிருக்கும் கடன்களை, அவை மூன்றாண்டுக்கு மேலாகியிட்டிருந்தால் தள்ளுபடி செய்துவிடுமாறு மாநில சர்க்கார்களை, மத்திய சர்க்கார் கேட்டிருக்கிறதாம்.

பீகார் அரசாங்க உத்தரவு

ஆதிவாசிகள் செலுத்தவேண்டிய கடன் மூன்று ஆண்டுகளுக்கு உட்பட்டதை மட்டும் வசூலிக்குமாறு பீகார் அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

'ஆங்கிலத்தை அகற்றுவது அவசரப்பட்ட செய்கையாகும்'

'ஆங்கில மொழியின் அவசியத்தை வலியுறுத்தவேண்டும்'

பல்கலைக்கழகப் பாடமொழி ஆய்வுக்குழு சிபாரிசு

"பல்கலைக் கழகங்களில் போதனை மொழியை ஆங்கிலத்திலிருந்து இந்திய மொழிகளுக்கு மாற்றியமைப்பதில் அவசரம் காட்டக் கூடாது"

என்று, பல்கலைக் கழக மானியக் குழு நியமித்த தனி விசாரணைக் குழு வற்புறுத்தியிருக்கிறது.

இந்த விசாரணைக் குழு 1955 அக்டோபர் திங்களில், பண்டிட் எச். என். குன்ஸ்ரு தலைமையில் நியமிக்கப்பட்டது.

இன்று நாட்டை எதிர்நோக்கியுள்ள மொழிப் பிரச்சினைக்கு இந்தக் குழு சமர்ப்பித்துள்ள சிபாரிசுகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகுமெனத் தெரிகிறது.

கல்வித் துறையில் ஆங்கிலத்திற்கு அளிக்கவேண்டிய முக்கியத்துவத்திற்கு இந்தக் குழுவின் முடிவுகள் பயன்படும்.

டாக்டர் சி. டி. தேஷ்முக் தலைமையில் நடைபெற்ற பல்கலைக் கழக மானியக் குழு, இந்த விசாரணைக் குழுவின் முடிவுகளை பொதுப்படையாக ஏற்றுக் கொண்டதாகத் தெரிகிறது. இந்த அறிக்கை இந்திய அரசாங்கத்திற்கு அனுப்பிவைக்கப்படும்.

மொழிப் பிரச்சினையை நன்கு ஆராய்ந்த பிறகு, பல்கலைக் கழகங்களில், போதனை மொழியை ஆங்கிலத்திலிருந்து வேறு இந்திய மொழிகளுக்கு மாற்றுவதற்கு முன்பு நன்கு யோசித்து முடிவு செய்யவேண்டும் என்று வற்புறுத்தியுள்ளதாகத் தெரிகிறது.

போதனை மொழி மாற்றப்பட்ட பின்னரும், ஆங்கிலத்தை எல்லாப் பல்கலைக் கழக மாணவர்களும் கட்டாயம் கற்கவேண்டும் என்று குழு கூறியுள்ளது.

நமது கல்வியின் நன்மையை உத்தேசித்து, பல்கலைக் கழகங்களில் ஆங்கிலம் இரண்டாவது மொழியாகவாவது எப்போதும் நீடிக்கவேண்டும் என்று வற்புறுத்திக் கூறியுள்ளது.

உயர்நிலைக் கல்வி அளவில் ஆங்கிலம் குறைந்தது 5 முதல் 8 ஆண்டுகள் போதிக்கப்பட வேண்டும் என்று குழு சிபாரிசு செய்துள்ளது.

பல்கலைக் கழகங்களில் துவக்கப்படும் பொதுக் கல்வி படிப்பிலும் ஆங்கிலம் கட்டாயமாக இடம் பெறவேண்டும் என்று குழு தெரிவித்துள்ளது.

இதைத் தவிர, பல்கலைக் கழகங்களில் உயர் படிப்பு படிக்க விரும்பும் மாணவர்களுக்கு ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தத் தனி ஏற்பாடு இருக்கவேண்டுமென்றும், மூன்றாண்டுப் பட்டப்படிப்பு அமுல் செய்யப்பட்டுள்ளதின் காரணமாக பட்டப்படிப்பு பூர்வாங்க வகுப்பில் ஆங்கிலம் போதிக்கப்படுவதில் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்றும், ஆசிரியர்களுக்கு ஆங்கிலப் போதனையில் புதிய முறைகளை அறிமுகப்படுத்த வேண்டுமென்றும் குழு சிபாரிசு செய்துள்ளதாகத் தெரிகிறது.

திரும்ப அழைக்கப்படும் அறிகுறிகள் காணோமாம்!

புதுடில்லி, டிச. 6—

சூயஸ் தகராறின்போது, அமைதியை உருவாக்க ஐ. நா. அனுப்பிய சர்வதேச இராணுவப் படையில் இந்திய இராணுவப் படையும் உள்ளதல்லவா?

"அந்தப் படை எப்போது மீண்டும் இந்தியாவுக்கு திரும்ப அழைக்கப்படும்?" என்று கேட்டதற்கு, 'அதற்கான அறிகுறிகள் எதும் தென்படவில்லை' என்று மக்கள்சபையில் வெளிநாட்டு விவகார உதவி அமைச்சர் இலக்குமி மேனன் தெரிவித்துள்ளார்.

தேங்காய் ஏற்றுமதி

இலங்கை தடை விதிக்கிறது

கொழும்பு, டிச. 6—

தேங்காய் ஏற்றுமதியை இலங்கை அரசாங்கம் தற்காலிகமாகத் தடை செய்துள்ளது.

உயர்ந்துகொண்டு செல்லும் தேங்காய் விலையைக் குறைப்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாம்!

இலங்கையிலிருந்து இந்தியா தான் அதிக அளவில் தேங்காயை இறக்குமதி செய்கிறது.

தென் இரயில்வேயில் இருதிசைப் போக்குவரத்து

அதிகரிக்குமெனத் தகவல்

புதுடில்லி, டிச. 6—

தென் இரயில்வேயில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் இருதிசைப் போக்குவரத்து இரயில்பாதையின் நீளம் 8 மடங்கு அதிகரிக்குமாம்.

விஜயவாடா—கூடூர் பிரிவு 182 மைல்; அரக்கோணம்—ஜோலார்பேட்டை 90 மைல்; ஜோலார்பேட்டை—ஈரோடு 60 மைல்; அரக்கோணம்—ரேணிகுண்டா 40 மைல்; வல்லூர்—இராசமகேந்திரம் 30 மைல் ஆகுமாம்.

இதனால் கூட்ஸ், பாசஞ்சர் வண்டிகளுக்கு அதிக வசதி ஏற்படுமாம்.

இந்தியா — பாகிஸ்தான் எல்லை வரையறை

தெற்குப் பகுதியில் இந்தியா—பாகிஸ்தான் எல்லையில் 120 மைல் தூரத்திற்கு எல்லை வரையறுக்கப்பட்டிருப்பதாக மக்கள் சபையில் பண்டித நேரு தெரிவித்துள்ளார்.

டச்சுக்காரர்களே, வெளியேறுக!

தூதுவர் அவலகங்களை இழுத்து மூடுக!

இந்தோனேஷிய சர்க்கார் உத்தரவு

ஜகார்தா, டிச. 5—

இந்தோனேஷியாவில் உள்ள டச்சு தூதுவரலுவலகங்களை எல்லாம் உடனடியாக மூடிவிடுமாறு இந்தோனேஷிய சர்க்கார் கேட்டிருக்கிறது. தொடர்ந்து அவை நீடிப்பதால், எவ்வித பலனும் இல்லை என்று சர்க்கார் கருதுவதே இதற்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது.

வேலையில்லாமல் சுற்றிக்கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான டச்சு மக்களை, இந்தோனேஷியாவை விட்டு வெளியேறுமாறும் சர்க்கார் உத்தரவிட்டுள்ளது.

'மேற்கு இரியன்' என்ற நியூ கினியா தங்களுக்குச் சேர வேண்டுமென்ற கோரிக்கையை வற்புறுத்துவதற்காக சர்க்கார் மேற்கொண்டுள்ள புதிய நடவடிக்கைகளுள் இவை சில என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

டச்சு சர்க்காருடன் கொண்டுள்ள இராஜீய உறவுகளும் முறிந்துவிடும் என்று இந்தோனேஷியா எச்சரித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

சர்க்கார் பொறுப்பில்!

நேற்று முன்தினம் தொழிலாளர்கள் கைப்பற்றிய 'கே.பி.எம்.' என்ற டச்சுக் கப்பல் கம்பெனியின் நிர்வாகம் சர்க்கார் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுவிட்டதாகவும் தெரியவருகிறது.

மேலும் இதுபோல, தொழிலாளர்கள் கைப்பற்றிய டச்சுக்காரருக்குச் சொந்தமான சகல நிறுவனங்களும் சர்க்கார் பொறுப்பில் வந்துவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளியேறுக!

டச்சுக்காரர்கள் வெளியேற வேண்டும் என்ற சர்க்காரின் உத்தரவுப்படி சுமார் 9,000 பேர் உடனடியாக வெளியேறுவர் என்று தெரியவருகிறது.

சர்க்காரில் வேலை செய்யும் டச்சுக்காரர்கள், கே. எல். எம். என்ற விமானக் கம்பெனியில் வேலை பார்ப்பவர்களும்கூட இந்த உத்தரவினால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

மந்திரியின் எச்சரிக்கை!

இப்போது பாரிசில் இருக்கும் இந்தோனேஷிய வெளி விவகார மந்திரி சுபாண்ட்ரியோ, "ஜாகர்தா சம்பவங்களைப் பார்த்த பிறகாவது, மேற்கு நியூ கினியா பற்றிய இந்தோனேஷியாவின் கோரிக்கையை டச்சு சர்க்கார், தீவிரமாக சிந்தித்தாக வேண்டும்; மேற்கு நியூ கினியாவிற்காக, இந்தோனேஷியாவில் தங்களுக்குள்ள நலன்களைப் பற்றி டச்சு சர்க்கார் கவலைப்படப்போவதில்லை என்றால், அது வேறு விஷயம்" என்று எச்சரித்திருக்கிறார்.

மக்கள் சபையில்......!

★

ஏழைக்கு உதவி இல்லை

"ஏழை எளியோர்க்கு வழக்காட இலவசமாக உதவி செய்வதற்காகத் தங்களிடம் திட்டம் எதுவும் இல்லை"

என்று, சட்ட மந்திரி ஏ. கே. சென் கூறியிருக்கிறார்.

★

செயற்கைச் சந்திரன்

"ரஷ்யா பறக்கவிட்ட செயற்கைச் சந்திரன்கள் பற்றி ரஷ்ய சர்க்கார் நமக்குத் தகவல் எதுவும் தரவில்லை; நமது வானொலி நிலையங்கள், அவற்றின் ஒலிகளைப் பதிவுசெய்ததுடன் சரி, நாமும் விபரம் கேட்டு ரஷ்ய சர்க்காருக்கு எழுதவில்லை."

என்று, கல்வி உதவி மந்திரி மதன் மோகனதாஸ் தெரிவித்தார்.

★

எண்ணிக்கை தருவதால் என்ன பயன்?

ரூ. 1 கோடிக்குமேல் வருமான வரி செலுத்த வேண்டியவர்களில், இன்னும் எழுபேர் செலுத்தவில்லையாம்!

அவர்கள் யார் என்றும் வெளியிடாமல், அவர்களிடமிருந்து என் பாக்கித் தொகை வசூலிக்கப்படவில்லை என்றும் அறிவிக்காமல், 'எழுபேர்' என்ற எண்ணிக்கையை மட்டும் மத்திய உதவி நிதியமைச்சர் பி. ஆர். பகத் மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

★

பிச்சைக்காரர் எண்ணிக்கையை மதிப்பிட முடியவில்லையாம்!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் பிச்சைக்காரர்களின் முன்னேற்றத்திற்காகச் செலவிட ரூ. 2 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாம்.

இந்தத் தொகையிலிருந்து மாநிலங்களுக்குப் பணம் ஒதுக்கப்படுமாம்; அதற்கான திட்டங்களை மாநிலங்கள் தயாரிக்க வேண்டுமாம்; இதுவரையில் சென்னை, உ. பி., பம்பாய் ஆகிய மாநிலங்கள் மட்டுமே திட்டம் தீட்டி அனுப்பியுள்ளனவாம்; அவை ஆராயப்பட்டு வருகிறதாம்; இதுவரையிலும், ஒதுக்கீடு தொகையின் அளவை முடிவு செய்யவில்லையாம்.

நாட்டில் மொத்தம் எவ்வளவு பிச்சைக்காரர்கள் உள்ளனர் என்ற புள்ளிவிவரம் அரசாங்கத்திடம் இல்லையாம்.

உள்விவகாரத் துணை அமைச்சர் வைலட் ஆல்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

தொழில், தொழிலியல் கல்வி பயிற்சி பெறுவோர்

எண்ணிக்கை அதிகரிக்கிறதாம்!

புதுடில்லி, டிச. 4—

இந்தியாவில், தொழில், தொழிலியல் ஆகியவைகளில் பயிற்சி பெறுபவர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே வருகிறதாம்! கைவேலைக்காரர்கள், இடம் பெயர்ந்தோர் ஆகியவர்களுக்கான பயிற்சித் திட்டத்தின்கீழ், பல்வேறு நிறுவனங்கள்—நிலையங்களில் அக்டோபர் இறுதிவரையில் 14,992 பேர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்களாம்: முந்திய மாதத்தில் இந்த எண்ணிக்கை 12,839 ஆக இருந்ததாம்!

கேரளக் கடலோரத்தில் கைப்பற்றப்பட்ட தங்கம்

புதுடில்லி டிச. 5—

"கோழிக்கோட்டிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் அக்டோபர் 15-ந் தேதி முதல் நவம்பர் 29-ந் தேதி வரை ரூ. 45,67,000 மதிப்புள்ள கள்ளக்கடத்தல் தங்கம் கைப்பற்றப்பட்டது" என்று துணை அமைச்சர் பி. ஆர். பகத் மாநிலங்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

மதத்திற்குப் பாதுகாப்பா?

பம்பாய், டிச. 5—

தாழ்த்தப்பட்ட மக்கள் பெருவாரியாக புத்தமதத்தைத் தழுவியது தெரிந்ததே.

பெற்றோர்கள் மதம் மாறிய காரணத்தினால், அவர்களுடைய குழந்தைகளும் மதம் மாறியதாகாதாம்.

குழந்தைகளின் மதம் பிறப்பின்போது நிர்ணயிக்கப்படுகிறதாம்; எனவே, அவர்களுக்குக் கல்விச் சலுகை தரப்படுமென்று பம்பாய் மாநில அமைச்சர் படேல் சட்டமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அரசியல் சட்டப் புத்தகம்

இந்தி மொழிபெயர்ப்பு அச்சாகிக் கொண்டிருக்கிறதாம்

புதுடில்லி, டிச. 6—

அரசியல் சட்டத்தின் இந்தி மொழிபெயர்ப்பு அச்சாகிக் கொண்டிருப்பதாகவும், உருது மொழிபெயர்ப்பு தயாராகிக் கொண்டிருப்பதாகவும் சட்ட மந்திரி ஏ. கே. சென் தெரிவித்துள்ளார்.

கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த அவர், மலையாள மொழிபெயர்ப்பு ஒன்றினை கேரள சர்க்கார் சீக்கிரமே வெளியிடுவர் என்றும், இதர மொழிகளில் அரசியல் சட்டம் வெளியிடுவது பற்றிய விவரங்கள் மாநிலங்களிலிருந்து சேகரிக்கப்பட்டுவருகின்றன என்றும் கூறியிருக்கிறார்.

பனிக்கட்டிகளை உடைக்கும் அணுசக்தி இயந்திரம்

40,000 குதிரை சக்தி வேகமுடையதாம்!

மாஸ்கோ, டிச. 6—

பனிக்கட்டிகளை உடைக்கும் இயந்திரத்தை அமெரிக்கா ஏற்கனவே கண்டு பிடித்துள்ளது; அந்த இயந்திரம் 22 000 குதிரை சக்தி வேகத்தில் செல்லக்கூடியது.

இப்போது ரஷ்யாவும் இது போன்ற ஒரு இயந்திரத்தைக் கண்டுபிடித்துள்ளதாம்; இது 40,000 குதிரை சக்தி வேகமுள்ளது என்றும், தினமும் சிறிதளவு அணுசக்தி எரிபொருள் உபயோகித்தால் போதுமானது என்றும், மாதக்கணக்கில் துறைமுகத்திற்கு வாராமல் கடலில் செல்லக்கூடியது என்றும் கூறப்பட்டிருக்கிறது.

நமது பாதையில் அமைச்சர் பக்தவத்சலம்

காஞ்சீபுரம், டிச. 4—

வீண் ஆடம்பரங்களுக்குப் பணத்தைச் செலவிடக்கூடாதென்று பல ஆண்டுகளாகப் பகுத்தறிவு இயக்கம் மக்களிடையே கூறிவரும் கருத்துக்கு ஆதரவாக அமைச்சர் பக்தவத்சலம், திருமணங்கள் பற்றிப் பேசியுள்ளார்.

"சிக்கனமாக, அதாவது—வீண் செலவில்லாமல் திருமணங்கள் நடைபெற வேண்டும்" என்று அவர் சேவா சமாஜத்தின் சேமிப்பு இயக்கக் கூட்டத்தில் கூறியுள்ளார்.

நடுத்தர வகுப்பினர் செலவில் சுலபமாகத் திருமணங்களை நடத்துவதற்கு ஆலயங்களில் வசதிகள் செய்துதரவும், ரூ. 3 அல்லது ரூ. 4 கட்டணம் செலுத்தி அவ்வசதிகளைப் பெறவும் தான் ஏற்பாடு செய்ய விரும்புவதாகவும் அவர் கூறியுள்ளார்.

சென்னை சர்க்காருக்கு ஓர் எடுத்துக்காட்டு

காஞ்சீபுரம் நகரசபைத் தீர்மானம்

"சாதிப் பெயர்களுடன் இயங்கும் சிற்றுண்டி, உணவு விடுதிகளுக்கும் மற்றும் கடைகளுக்கும் 'அனுமதி' (லைசன்ஸ்) வழங்கக்கூடாது"

என்று, காஞ்சீபுரம் நகரசபை முடிவு செய்துள்ளது.

இந்த முடிவு, நடைபெற்ற நகர சபைக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டு, அந்தத் தீர்மானத்தின் நகல் ஒன்று சென்னை அரசாங்கத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

குறிப்பு:— ஏற்கனவே ஈரோடு நகரசபையும் இதே போன்று சாதிப் பெயர் தாங்கிய பொது வாணிப இடங்களுக்கு 'அனுமதி' (லைசென்ஸ்) அளிக்கக்கூடாது என்று முடிவு செய்துள்ளது தெரிந்ததே.

தேனியில் மு.கருணாநிதி, எஸ்.முத்து

பொதுக்கூட்டத்தில் கழகக் கொள்கை விளக்கம்

2—12—57-ல், தேனி கிழக்குச் சந்தையில்ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் ஆ. கருப்பையா முன்மொழிய மு. தங்கராசன் வழிமொழிய ஊராட்சிமன்ற உறுப்பினர் தோழர் ம. செ. வே. செந்தியப்பன் தலைமைவகித்தார்; கூட்டத்தில் தோழர்கள் மு. கருணாநிதி, மு. தங்கராசன், வி. வி. குருசாமி, டி. பி. அழகமுத்து, எஸ். முத்து ஆகியோர் பேசினர்.

தோழர் மு. கருணாநிதிக்கு தேனி நகர தி. மு. கழகம், நெடுஞ்செழியன் மன்றம் ஆகியவைகளின் சார்பில் மலர்மாலைகளும், கைத்தறி ஆடையும் அணிவிக்கப்பட்டன; மற்றும், பழனி செட்டிபட்டி, அல்லிநகர், அன்னஞ்சி, பூதிப்புரம், காமாட்சிபுரம், ஓடைப்பட்டி, முத்துதேவனிப்பட்டி, குன்னூர், பெரியகுளம், வடக்குக் குருவப்பட்டி, ஆசாரிபட்டி, ரோசனப்பட்டி, வாழையாக்குபட்டி, ஆண்டிபட்டி, சுக்குவாடன்பட்டி, கிழப்பட்டி, புதுப்பட்டி, மரிக்குண்டு சுப்புலாபுரம், க. உசிலம்பட்டி, வீரபாண்டி, உப்புக்கோட்டை, சடையால் பட்டி, கோட்டையூர், சிலையம்பட்டி, முத்தனம்பட்டி, கோடாங்கிபட்டி, கருவேல்நாய்க்கன்பட்டி, அரண்மலைப்புதூர், உயல்பட்டி, பேட்டைப்பட்டி, கொடுவிலார்பட்டி, சிவலிங்கநாய்க்கன்பட்டி, அம்பாசமுத்திரம், வெங்கடாசலபுரம், ஸ்ரீரெங்காபுரம் ஆகிய ஊர்களின் தி. மு. கழகக் கிளைகளின் சார்பில் மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன. கூட்டத்தில் சுமார் 20,000 மக்கள் திரண்டிருந்தனர்.

முதலில், வி. வி. குருசாமி கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

அடுத்து மாவட்டச் செயலாளர் எஸ். முத்து அமைச்சர்களின் திறமையின்மையை விளக்கியதுடன், தேனி கலவரத்தின் பயனாக இவ்வட்டத்தில் பெருவாரியாக தி.மு.க. கிளைகள் துவக்கப்பட்டுள்ளன என்றும் குறிப்பிட்டார்.

அடுத்து தோழர்கள் டி. பி. அழகமுத்து, மு. தங்கராசன் முதலியவர்கள் பேசினர்.

பின்னர், தோழர் மு. கருணாநிதி அவர்கள் இந்தியின் கொடுமை, வடவரின் ஆதிக்கம், நங்கவரம் போராட்டம், சட்டசபை நிகழ்ச்சி ஆகியவை குறித்தும், தாய்மொழியைக் காக்க தாளமுத்து-நடராசன் ஆகியோர் தங்கள் இன்னுயிரை அர்ப்பணித்த நிலையையும் விளக்கிவிட்டு, இந்தியை எதிர்க்க அனைவரும் முன்வரவேண்டுமெனக் கோரினர்.

செயலாளர் ஆ. கருப்பையா நன்றி நவின்றார்.

நன்றியறிவிப்பு

"எனது தந்தையார் திரு. நடேசனார் அவர்கள் 19—11—57ல் இயற்கை எய்தியது குறித்து நேரில்வந்து ஆறுதல் கூறிய பொதுச்செயலாளர் . இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கும், தோழர் மு. கருணாநிதி அவர்களுக்கும், அஞ்சல்மூலமும் நேரிலும் தங்களது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்ட இயக்கத் தோழர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்"

என, மாயூரம் தி. மு. க. செயலாளர் என். கிட்டப்பா தெரிவித்துக் கொள்கிறார்.

ரூ. 3.76 இலட்சம் இலாபம் கிடைத்ததாம்!

"29-11-56 முதல் 31-3-57 வரை ரூ. 3·76இலட்சம், கோலார் தங்கவயல் மூலம் அரசாங்கத்திற்கு இலாபம் கிடைத்துள்ளது" என்று, மக்கள்சபையில் சுரங்க அமைச்சர் மாளவியா தெரிவித்துள்ளார்.

வாலாஜாபாத்

இந்துமத பாடசாலை

இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் தென் வட்டார மானேஜர் திரு. கே. பாலசுப்பிரமணியம், சென்னைக் கிளையின் வளர்ச்சித்துறை அலுவலர் திரு. என். சுவாமிநாதன், சென்னைக் கிளையின் துணைத் தலைவர் திரு. ஏ. எம். சீனிவாசன் ஆகியோர் 1—12—57 மாலை வாலாஜாபாத் இந்துமத பாடசாலைக்கு வருகை புரிந்து பாடசாலை, மாணவர் இல்லம், தொழிற்சாலை ஆகியவைகளைப் பார்வையிட்டு மகிழ்ந்து யாவரையும் வாழ்த்தினார்கள்.

பாடசாலையின் செயலாளர், தலைமையாசிரியர், அமைச்சர்கள், சாரணர்கள் யாவரும் அவர்களை வரவேற்றனர்.

மாணவர்களுடைய வலிமைக் காட்சிகள் யாவும், வந்த பெருமக்கள் கண்டு களித்தனர். பின்னர் திரு. சீனிவாசன் பேசுகையில் இந்துமத பாடசாலை ஆண்டுக்கு ஆண்டு சிறப்பாக நடைபெறுகிறது என்றும், இங்குப் படிக்கும் மாணவர்கள் நற்பேறு பெற்றவர்கள் என்றும் இப்பாடசாலைக்கு உதவி புரிவது நாட்டுக்கு உதவி புரிவதுபோலாம் என்றும் கூறினார்கள்.

பின்னர் திரு. சுவாமிநாதன் பேசுகையில், பாடசாலையைத் தொடங்கியவர்கள் உண்மையோடும் உறுதியோடும் பணிபுரிவதால் இக்கல்வி நிலையம் நன்கு நடைபெறுகின்றது என்றும், இதில் தமக்குப் பலஆண்டுகள் அனுபவம் இருப்பதாயும் கூறி வாழ்த்தினர்.

தலைவர் திரு. கே. பாலசுப்பிரமணியம் முகவுரை கூறுகையில் இந்துமத பாடசாலைக்கு இப்போது வருகைபுரிந்து யாவற்றையும் நேரில் காண முடிந்ததற்காக மகிழ்ச்சி தெரிவித்தார். மாணவர்கள் கல்வி அறிவு ஒழுக்கம் தொழிற்பயிற்சி ஆகிய யாவற்றிலும் வல்லவராகின்றமையைப் பாராட்டினர். இப்பாடசாலையை நடத்துபவர்கள் எல்லோருடைய உதவியையும் பெறுதற்குரியவர்கள் என்றும் கூறினர்.

செயலாளர் திரு. வா. தி. மாசிலாமணி அவர்கள் யாவருக்கும் நன்றி கூறினர்.

இலங்கைவாழ் தமிழரின் எதிர்காலம்?

பண்டிதருடன் பேச்சுவார்த்தை

இலங்கைப் பிரதமருக்கு மிக்க திருப்தி தருகிறதாம்

பண்டித நேருவுடன் தான் நடத்திய பேச்சு வார்த்தைகள் நேசபாவத்துடன் அமைந்திருந்தன என்றும், அவை தனக்கு மிகுந்த திருப்தியைத் தந்தன என்றும் இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா கூறியிருக்கிறார்.

தாங்கள் இருவரும், இருநாடுகளுக்கும் பொதுவான பிரச்சினைகள் பல பற்றியும் பேசியதாகவும், குறிப்பாக இலங்கை இந்தியர் பிரச்சினை பற்றிப் பேசியதாகவும் பண்டார, பத்திரிகையாளரிடம், பம்பாயில், இலங்கைக்குப் புறப்படுவதற்கு முன்பாகக் கூறியிருக்கிறார்.

"இலங்கை இந்தியர் எதிர்காலம் பற்றி நாங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டோம்; தொடர்ந்து மீண்டும் ஓர்முறை சந்தித்து விரிவாக இதுபற்றி விவாதிப்பதென முடிவு செய்திருக்கிறோம்" என்றும் பண்டார கூறினாராம்!

"ஆனால், எப்போது சந்திப்பது என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை" என்றும் அவர் கூறினாராம்.

"இலங்கை இந்தியர் பிரச்சினையை, வேறு எதையும்விட மனிதாபிமான நோக்குடனேயே அணுக வேண்டும் என நீங்கள் இருவரும் ஒப்புக்கொண்டிருப்பது உண்மைதானா?"

என்று ஒரு நிருபர் கேட்டதற்கு "மனிதாபிமான நோக்குடன் மட்டுமல்ல; பிரச்சினையில், அரசியல்—பொருளாதார—சமூகச் சிக்கல்களும் இருக்கின்றன" என்று பண்டார கூறினாராம்!

தான் டெல்லி வந்தது பற்றி மிக்க மகிழ்ச்சியுறுவதாகவும், பல வகையில் இந்தப் பயணம் தனக்குப் பயன்பட்டது என்றும், 'எங்கள் இலங்கையின் வளர்ச்சிக்காகத் திட்டமிடுவது பற்றி உங்கள் திட்ட இலாகாவின் உதவியைப் பெறுவது சாத்தியமாயிருந்தது' என்றும் பண்டாரநாயகா புன்னகை தவழக் கூறினாராம்!

டெல்லியில் டெலிவிஷன்!

சர்க்கார் பரிசீலிக்கிறதாம்

புதுடில்லி, டிச. 7—

"சமூக, மற்றும் கல்விக் காரியங்களுக்காக பரிசோதனை டெலிவிஷன் யூனிட் ஒன்றினை டெல்லியில் நிறுவுவது பற்றி சர்க்கார் இன்னும் பரிசீலித்துக் கொண்டிருக்கின்றனர்; திட்டம் எதும் தயாராகிவிடவில்லை" என்று தகவல் ஒலிபரப்பு மந்திரி டாக்டர் பி. வி. கேஸ்கர் கூறியிருக்கிறார்.

சென்னை 36-வதுவட்ட தி. மு. க. பணிமனையில் கொடியேற்று விழா

8—12—57 காலை 8 மணிக்கு சென்னை வடக்குத் தியாகராய நகர், மாம்பலம் நெடுஞ்சாலையிலுள்ள மேற்படி வட்ட கழகப் பணிமனையில் பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை அவர்கள் அண்ணா படத்தைத் திறந்து வைப்பார். சென்னை மாவட்ட தி. மு. க. துணைச்செயலாளர் கோ. செங்குட்டுவன் கொடியேற்றிவைப்பார்.

சொற்பயிற்சிக் கூட்டம்

8—12—57 மாலை 6 மணிக்கு சென்னை—கோடம்பாக்கம் புலியூர் அறிவு வளர்ச்சி மன்றத்தில் தோழர் து. புருடோத்தமன் தலைமையில் தோழர்கள் இரெ. கரிகாலன், பெ. அ. இன்மொழி, குமரேசன் ஆகியோர் பேசுவர்.

பண்ணுருட்டி தி. மு. க. செயற்குழு உறுப்பினர்களுக்கு:

10—12—57 இரவு 9-மணிக்கு கார்த்திரோடு எண்-33, திரு. வி. கிருஷ்ணராஜ் அவர்கள் பணிமனையில், கழகச் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்; அதுபோது, முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்குவரும்.

இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க. 3-வது மாநாடு

வரவேற்புக்குழுக் கூட்டம்

8—12—57- மாலை 3 மணி அளவில் தேவகோட்டை வடக்கு சிலம்பணி, எண்-76, தோழர் இராம. வெள்ளையன் அவர்கள் இல்லத்தில் மேற்படி கூட்டம் நடைபெறும்.

"அவ்வமயம் ஆய்வுக்கு வருபவை:—

1. மாநாட்டுக்குத் தேதி, இடம் நிர்ணயித்தல்;
2. மாநாட்டுத் தலைவர், திறப்பாளர் முதலியோரைத் தேர்ந்தெடுத்தல்;
3. உறுப்பினர் கோணர்வன.

"வரவேற்புக்குழு உறுப்பினர் அனைவரும் தவறுமல் வருகை தர வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்."

என, மாவட்டச் செயலாளர் தோழர் இ. ல. ம. சௌந்திரபாண்டியன் கேட்டுக் கொள்கிறார்.

சுகாதார நாள்

8—12—57 மாலை 3-30 மணிக்கு, அ. இ. ஆர். எம். எஸ். ஊழியர் சங்கங்களின் சென்னை அஞ்சல் பிரிப்பகக் கிளைகளின் சார்பில் சென்னை மேயர் திருமதி தாரா செரியன் தலைமையில் சென்னை அஞ்சல் பிரிப்பகத்தில் சுகாதார நாள் கொண்டாடப் பெறும்; தொழிலாளர் நல அதிகாரி திரு. நம்பையா, நகர சுகாதார அதிகாரி திரு. பி. வி. சுந்தரபாபு. திரு. ப. உ. சண்முகம் எம். எல். ஏ. ஆகியோர் பேசுவர்.

சென்னை—16-வது வட்ட மாணவ-மாணவிகள் மன்ற ஆண்டுவிழா

8—12—57 காலை 9-30 மணிக்கு, சென்னை—16-வதுவட்டம் தாண்டவராயபிள்ளைத்தெரு 22, எண்ணுள்ள மனையில், திருவள்ளுவர் முன்னேற்றக் கழக மாணவ-மாணவிகள் மன்றத்தின் முதலாவது ஆண்டுவிழா தோழர் ஜே. டி. பாண்டியன் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் த. முத்து, வ. செயராமன், டி. எல். கந்தசாமி, இரா. து. மணி, மற்றும் பலர் பேசுவர். மாணவி ஆ. பி. சண்பகவல்லி இன்னிசை வழங்குவார்.

சென்னை — இராயப்பேட்டையில் இந்தி எதிர்ப்பு கூட்டம்

அண்ணு கலந்து கொள்வார்

10—12—57 மாலை 6 மணிக்கு சென்னை—இராயப்பேட்டை, சீனிவாசபுரம் 2-வது தெருவில் முத்தமிழ் முன்னேற்ற மன்றச் சார்பில் தோழர் மோ இராசாராம் தலைமையில் இந்தி எதிர்ப்புக் கூட்டம் நடைபெறும். அண்ணு, அவர்களும், தோழர்கள் ஏ. வி. பி ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., கோ. இளவரசு, சு. லோகநாதன் ஆகியோரும் சொற்பொழிவாற்றுவர். டேப் இராதாமாணிக்கம் இன்னிசையுண்டு.

திருக்குறள் வகுப்பு

8—12—57 காலை 10 மணிக்கு தனலட்சுமி உயர்தர ஆரம்பப் பள்ளியில், சென்னை-வண்ணையம்பதி தமிழ் இளைஞர் கழகச் சார்பில் 'துறவு' என்ற அதிகாரத்தை திரு. மாணிக்கசாமி அவர்கள் விரித்துரைப்பார்.

கழகக் கூட்டங்கள்

சென்னை 36-வதுவட்டம்
வடக்குத் தியாகராயநகர்
வடக்கு உஸ்மான் ரோடில்
(கோடம்பாக்கம் இரயில் நிலையம் அருகில்)
8—12—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: எம். ஏ. துரை
பேசுவோர்:
க. அன்பழகன் எம்.எல்.ஏ.
சத்தியவாணிமுத்து எம். எல். ஏ.
காஞ்சி-கல்யாணசுந்தரம்
மா. செங்குட்டுவன்
இன்னிசை: சேலம்-சீனிவாசன்

★

அலமேல்புரம் பூண்டி
தி. மு. க. துவக்க விழா
9—12—57 மாலை 5 மணிக்கு
தலைவர்: தே. பட்சிராசன்
பேசுபவர்:
சி. பி. சிற்றரசு

★

புதியம்புத்தூர்
எஸ்.பி.ஜி. மிஷன் பங்களாவில்
9-12-57 மாலை 5-30 மணிக்கு
தலைவர்: இ. தங்கராசு
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
டி. ஆர். சுப்பிரமணியம்
பி. எஸ். இசக்கிநாதன்
பெ. துரைசாமி

★

கொப்பாவளி
தி. மு. க. துவக்க விழா
9—12—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: டி. பிச்சை
பேசுவோர்:
அன்பில்-தர்மலிங்கம்
கே. ஆர். பி. மணிமொழியன்
எஸ். நெடுமாறன்

★

போடிநாயக்கனூர்
தொண்டன் பழனியாண்டி திடலில்
10—12—57 மாலை 6½ மணிக்கு
தலைவர்:
சு. அ. மு. சுப்பிரமணியம்
பேசுவோர்:
க. அன்பழகன் எம்.எல்.ஏ.
ஞானசுப்பிரமணியபாண்டியன்
முகதா

★

குலமாணிக்கம்
கலைவாணர் திடலில்
10—12—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: எஸ். பாண்டியன்
பேசுவோர்:
அன்பில்-தர்மலிங்கம்
கே. ஆர். பி. மணிமொழியன்

★

வெண்ணவாசல்
(தஞ்சை மாவட்டம்)
திருவள்ளுவர் பூங்காவில்
10—12—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: உ. முகம்மதுஇப்ராகிம்
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
வைத்திலிங்கம்
இசை:
ஏ. எம். ஏ. ரகீம்
கே. ஆர். நடராசன்

★

முகவூர்
பொன்விழா திடலில்
10—12—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: ஏ. வெள்ளைத்துரை
பேசுபவர்:
இரா. நெடுஞ்செழியன்

★

இராஜசிங்கமங்கலம்
அண்ணு திடலில்
9—12—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: இராம. வெள்ளையன்
பேசுவோர்:
க. அன்பழகன் எம்.எல்.ஏ.
வீ. வீரப்பன்

நேரில் ஆங்கிலம் கற்பிப்பதற்கெனப் பிரத்தியேகமாக சென்னையில் ஏற்பட்டிருக்கிற மாபெருங் கல்வி அரங்கம்

THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக் கல்வி நிலையம்

60, பிராட்வே — மண்ணடி — சென்னை-1.

★

KNOWLEDGE IS POWER

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில்

அடிப்படையிலிருந்து இலக்கண ரீதியாக

இங்கிலீஷ் திருத்தமாக நேரில் கற்கலாம்

சென்ற வருட டிசம்பர் மாதம் ஆரம்பமாகிய இங்கிலீஷ் வகுப்புகள் இந்த வருட டிசம்பரில் முடிவடைகின்றன.

புதிய வகுப்புகள்

டிசம்பர் 10-ந் தேதி ஆரம்பமாகின்றன.

வகுப்பில் சேர விண்ணப்பம் செய்துகொள்ள

கடைசி தேதி: 9-12-57

இலக்கண ரீதியாக இங்கிலீஷில் பேசவும் சொந்தமாகக் கட்டுரைகள், கடிதங்கள் எழுதவும் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்.

காலையிலோமாலையிலோவசதியானநேரத்தில் வகுப்பிற்கு வந்து ஒருமணி நேரம் படித்தால் போதுமானது

முழு விவரங்களை நேரில் வந்து தெரிந்து கொள்க.

முக்கிய அறிவிப்பு:- 16 வயதுக்கு மேற்பட்டவர்களே இவ்வகுப்பில் சேரலாம். பெண்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள். ஞாயிற்றுக் கிழமைகளில் கல்வி நிலையம் திறந்திருக்கும்.

ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் இங்கு நடைபெறும் வகுப்புகளில் சேர்ந்து திருத்தமாகக் கற்றுப் பயனடையலாம்.

திராவிட முன்னேற்றக் கழகத் தக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடம் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன் ...